DEPOSITION OF THE WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE COURT NO.II, RAMANATHAPURAM

**C.C.No.05/2020**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Deposition of the | : | PW4 | Caste | : | |
| Name | : | சசிகலா | Age | : | 38 |
| W/o | : | கார்த்திக்கேயன் | Occupation | : | சார்பு ஆய்வாளர், பொருளாதார குற்றப்பிரிவு, மதுரை |
| Village | : | | | | |
| District | : | மதுரை | | | |

Solemnly affirmed in accordance with the provision of oaths Act on the 26th day of October 2023.

**26.10.2023**

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை**

1. நான் தற்போது மதுரை மாவட்டம் பொருளாதார குற்றப்பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.09.2019 ம் தேதி இரவு 19.00 மணிக்கு இராமநாதபுரம் குடிமைப்பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வுத்துறை சார்பு ஆய்வாளராகிய நான், தலைமைக்காவலர் பாலசுப்பிரமணியன் மற்றும் பெண் தலைமக்காவலர் சாரால் ஆகியோருடன் அத்திவாசிய பொருட்கள் கடத்தல் மற்றும் பதுக்கல் சம்மந்தமாக கமுதி பகுதியில் ரோந்து செய்து வந்தபோது கிடைத்த தகவலின் அடிப்படையில் கமுதி to பேரையூர் ரோட்டில் உள்ள அரசு மருத்துவமனை அருகே வாகன சோதனை செய்தபோது எங்களுக்கு எதிரே வந்த TN 65 F 3980 TVS XL Heavy Duty வாகனத்தில் இருந்த இரண்டு சிப்பங்களை பிரித்து பார்த்தபோது அதில் தமிழக அரசால் பொது விநியோக திட்டத்தில் பொது மக்களுக்கு வழங்கக்கூடிய ரேசன் அரிசி தலா சுமார் 50 கிலோ எடையுள்ள 2 சிப்பம் ரேசன் புழுங்கல் அரிசி இருந்ததை கண்டுபிடித்து இருசக்கர வாகனத்தில் வந்த போஸ் என்பவரை விசாரணை செய்தபோது ரேசன் அரிசியை வைத்திருந்ததற்கான ஆவணங்கள் எதுவும் இல்லாததால் ஆதாயம் நோக்கம் கருதி ரேசன் அரிசியை கடத்தி வந்த குற்றத்திற்காக காரணம் கூறி 19.30 மணிக்கு கைது செய்து விசாரிக்க போஸ் என்பவர் எவ்வித அச்சுறுத்தலோ, துன்புறுத்தலோ இன்றி தாமாக முன் வந்து போலீஸ் பார்ட்டிகள் முன்னிலையில் ஒப்புதல் வாக்குமூலம் அளித்தார். (**அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அதே சாட்சிகள் முன்னிலையில் 50 கிலோ எடைகொண்ட 2 சிப்பம் புழுங்கல்அரிசி மற்றும் TN 65 F 3980 என்ற வாகனத்தையும் அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். (**அந்த அத்தாட்சி அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர் ஆஜர் எதிரியின் வீட்டில் வைத்து 50 கிலோ எடை கொண்ட 13 சிப்பம் புழுங்கல் அரிசி, 50 கிலோ எடை கொண்ட 5 சிப்பம் பச்சரிசி ஆகியவற்றை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி மூலம் கைப்பற்றினேன். (**அந்த அத்தாட்சி அ.சா.ஆ.11 ஆக குறியீடு

**செய்யப்படுகிறது).** கைப்பற்றிய ரேசன் பொருட்களை கமுதி தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம் கிட்டங்கியில் ஒப்படைத்து ஒப்புதல் ரசீது பெற்றேன். பின்னர் எதிரி மற்றும் வாகனத்தை நிலையம் கொண்டு வந்து நிலைய குற்ற எண். 118/2019, பிரிவு 6(4) of TNSC (RDCS) order 1982 r/w 7(1)(a)(ii) of EC Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். **(முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினேன். பின்னர் வழக்கு கோப்பை காவல் ஆய்வாளரின் பார்வைக்கு சமர்ப்பித்தேன்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

1. எங்களுடைய காவல் நிலையம் இராமநாதபுரத்தில் தான் உள்ளது என்றால் சரிதான். காவல் நிலையத்திலிருந்து சம்பவ இடம் சுமார் 55 கி.மீ தொலைவில் உள்ளது என்றால் சரிதான். அன்றைய தினம் எத்தனை மணிக்கு காவல் நிலையத்திலிருந்து கிளம்பினோம் என்றால் சுமார் 18.00 மணிக்கு கிளம்பினோம். என்னிடம் பொதுமக்கள் புகார் மனு ஏதேனும் அளித்தார்களா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு செல்லும்போது எந்தெந்த இடத்தில் நாங்கள் சோதனை செய்தோம் என்றால் சோதனை செய்யவில்லை. கமுதியில் ரோந்து செய்தோம். காவல் நிலையத்தில் இருந்து நேரடியாக கமுதிக்கு தான் சென்றோம் என்றால் சரிதான். கமுதியில் இருந்து சம்பவ இடம் சுமார் 10 கி.மீ தொலைவில் இருக்கும் என்றால் சரிதான். எந்த வழியாக நாங்கள் சம்பவ இடத்திற்கு சென்றோம் என்றால் சரியாக ஞாபகம் இல்லை. இராமநாதபுரத்தில் இருந்து கமுதிக்கு செல்ல வேண்டும் என்றால் ஒரு மணி நேரம் ஆகும். எந்த திசையில் நின்று கொண்டு நாங்கள் வாகன சோதனை செய்தோம் என்றால் மருத்துவமனைக்கு எதிரே நின்று சோதனை செய்தோம்.

2. எங்கள் காவல் நிலையத்திலிருந்து தெற்கு திசையில் மேற்படி மருத்துவமனை உள்ளது. எதிரி எந்த திசையில் இருந்து வந்தார் என்றால் பேரையூரில் இருந்து வந்தார். ஒப்புதல் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பாக்குவெட்டி கிராமம் சம்பவ இடத்தில் இருந்து எந்த திசையில் உள்ளது என்றால் தெரியாது. சம்பவ இடத்தில் பள்ளி, மருத்துவமனை, மாணவர் விடுதி உள்ளன என்றால் சரிதான். சம்பவ இடத்தில் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றால் சரிதான். ஆஜர் எதிரியின் வீட்டை சுற்றி வீடுகள் உள்ளன என்றால் சரிதான். ஆஜர் எதிரியின் வீட்டருகே குடியிருக்கும் நபர்களை நான் சாட்சியாக இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். சாட்சியாக அழைத்தேன் ஆனால் அவர்கள் வரவில்லை. சம்பவ இடத்தில் புகைப்படம் ஏதேனும் எடுத்தேனா என்றால் இல்லை. என்னுடன் வந்த தலைமக்காவலர் பாலசுப்பிரமணியன் நீதிமன்ற பணிகளை மேற்கொண்டு வந்தார் என்றால் சரிதான்.

3. அரசால் முத்திரையிட்ட பையில் இருந்து இவ்வழக்கின் அரிசிகளை கைப்பற்றவில்லை என்றால் சரிதான். அரிசியை பார்த்தவுடன் அது ரேசன் அரிசி என்று சொல்ல முடியாது என்றால் சரியல்ல. நான் அரிசியை யாரிடம் எத்தனை மணிக்கு ஒப்படைத்தேன் என்றால் பாஸ்கரன் என்பவரிடம் சுமார் 20.30 மணிக்கு ஒப்படைத்தேன். மேற்படி அரிசியை எங்களுடைய வாகனத்தில் கிட்டங்கிற்கு எடுத்து சென்றோம். எங்களின் வாகனத்தில் 5 நபர்கள் மட்டும் தான் பயணிக்க முடியும் என்றால் சரிதான். நாங்கள் இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட அரிசிகளை 2 முறையாக கிட்டங்கியில் ஒப்படைத்தோம். இந்த விபரத்தை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கமுதியில் இருந்து சம்பவ இடத்திற்கு வர வேண்டும் என்றால் ஒரு மணி நேரம் ஆகும் என்றால் அரை மணி நேரம் தான் ஆகும். அரிசியை ஒப்படைக்க என்னுடன் தலைமைக்காவலர் பாலசுப்பிரமணியன் வந்தார்.

4. தலைமக்காவலர் சாரால் எங்களுடன் வரவில்லை. இந்த சம்பவம் குறித்து பேரையூர் காவல் நிலையத்தில் தகவல் சொன்னேனா என்றால் இல்லை. நான் சொன்னதுபோல் அரிசியை கைப்பற்றவில்லை என்றாலும், குடோனில் ஒப்படைக்கவில்லை என்றாலும், வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சம்பவ தினத்தன்று ரைடுக்கு செல்லவில்லை என்றாலும், எதிரியை கைது செய்யவில்லை என்றாலும், அவரிடம் இருந்து ஒப்புதல் வாக்குமூலம் பெறவில்லை என்றாலும் சரியல்ல. நாங்கள் காவல் நிலையத்திற்கு 23.30 மணிக்கு வந்தோம். சம்பவத்தை குறித்து ஆய்வாளரிடம் தெரிவித்தேனா என்றால் தெரிவித்தேன். ஆய்வாளரின் விசாரணையின்போது பாக்கெட் டைரியை ஒப்படைத்தேனா என்றால் ஒப்படைத்தேன். மேற்படி பாக்கெட் டைரியை காவல் நிலையத்தில் வைத்து சம்பவத்திற்கு மறுநாள் ஒப்படைத்தேன். புள்ளி விவரத்திற்காக ஆஜர் எதிரி மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை

**(ஒப்பம்/–க.பிரபாகரன்)**
**நீதித்துறை நடுவர் எண்.2,**
**இராமநாதபுரம்.**